**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 140** **நாள்: 12.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.38.23 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணிகள் மற்றும் சிறு பழுதுகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,894 கி.மீ. நீளமுள்ள 7,350 மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் பருவமழை துவங்குவதற்கு முன்பாக இந்த மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்படுகிறது. மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி சுழற்சி முறையில் ஆண்டிற்கு இரண்டு முறை செயலாக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியானது தூர்வாரும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்களின் மூலம் வாரகால அட்டவணை பட்டியலிடப்பட்டு அதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணிகளுக்காக மண்டல வாரியாக 209 பணிகளுக்கு ரூ.20.40 கோடி மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால்வாய்களில் மழைநீர் உட்செல்ல உள்ள வழிகள் மற்றும் குழாய்களில் உள்ள அடைப்புகளை அகற்றவும், கால்வாய்களில் ஏற்பட்டுள்ள சிறு பழுதுகளை அகற்றுவதற்கும் மண்டல வாரியாக 174 பணிகளுக்கு ரூ.17.83 கோடி மதிப்பீட்டிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த மண்டலங்கள் மூலமாக பணிகள் நடைபெற்று வருகிறது. மக்கள் தொகை நெருக்கமாக உள்ள பகுதிகள், வணிக பகுதிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் இல்லாத காரணத்தால் கழிவுநீர் கலக்கும் வடிகால்களில் உயர்திறன் கொண்ட உறிஞ்சும் இயந்திரங்களை கொண்டு தூர்வாரப்படுகிறது. இந்த தூர்வாரும் பணிகள் அக்டோபர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 30 நீர்வழிக்கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் கொடுங்கையூர், ஏகாங்கிபுரம், மாம்பலம் மற்றும் எம்.ஜி.ஆர். கால்வாய்கள் சுவிட்சர்லாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட ரொபோடிக் எக்ஸவேட்டர் இயந்திரத்தின் மூலம் தூர்வாரப்பட்டு வருகிறது. இதேபோன்று, பக்கிங்காம் கால்வாய், அடையாறு, விருகம்பாக்கம் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய்களில் உள்ள ஆகாயத்தாமரை பின்லாந்து நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட ஆம்பிபியன் இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு தூர்வாரப்பட்டு வருகிறது. இந்த 30 நீர்வழிக்கால்வாய்களில் ரொபோடிக் எக்ஸவேட்டர் இயந்திரத்தின் மூலம் சுழற்சி முறையில் தூர்வாரப்படுகிறது. இந்த இயந்திரங்கள் மூலம் இதுவரை சுமார் 45,000 மெட்ரிக் டன் ஆகாயத்தாமரை மற்றும் வண்டல்கள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும், நீர்வழிக்கால்வாய்களில் மிதக்கும் குப்பைகள் முகத்துவாரத்திற்கு செல்லாமல் தடுக்கும் வகையில் மிதக்கும் டிரஷ் பூம் (Trush Boom) என்ற இயந்திர வலை கால்வாய்களில் 10 இடங்களில் பொருத்தப்பட்டு மிதக்கும் குப்பைகள் அகற்றப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைக்காலங்களில் வெள்ளப் பாதிப்புகளிலிருந்தும், சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருக்கவும், ரூ.38.23 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணிகள் அந்தந்த மண்டலங்களில் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மழைநீர்வடிகால்கள் தூர்வாரும் பணிகள் மற்றும் சிறு பழுது நீக்கும் பணிகளை பருவமழை தொடங்குவதற்குள் விரைந்து முடிக்க வேண்டும். மேலும், தூர்வாரும் பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை மண்டல அலுவலர்களும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும் நேரில் சென்று அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். இப்பணிகளில் ஏதேனும் குறைகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**